மதுக்கடைகளை பாதுகாப்பதை விட மலைகளைப் பாதுகாப்பது முக்கியம்

அரசு மீது ஐகோர்ட் கிளை சாடல்

மதுரை, அக். 6: அரசு மதுக்கடைகளை பாதுகாப்பதை விட மலைகளை பாதுகாப்பது முக்கியம் என ஐகோர்ட் கிளை காட்டமாக தெரிவித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த பெத்தணன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், “மதுரை மாவட்டம் பேரையூர் அருகில் ஓணான் கரடு மற்றும் பெருமாள்மலை உள்ளது. ஓணான்கரடு மலைதொல்பொருள், வரலாற்று எச்சங்களை கொண்டுள்ளது. தற்போது இந்த மலைப்பகுதியில் கல் குவாரி நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த, பகுதியில் கல் குவாரி செயல்பட்டால் பழமையான எச்சங்கள் அழியக்கூடும். எனவே, ஓணான் கரடு மலையில் குவாரி நடத்த தடை விதிக்கவேண்டும்” என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் பி.வேல்முருகன், கே.கே. ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில் பதில்மனு தாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும் என கோரப்பட்டது. அப்போது நீதிபதிகள், “மதுக் கடைகளை பாதுகாக்க அரசு காட்டும் அக்கறையை, பதில்மனு தாக்கல் செய்வதில் காட்டுவதில்லை. மதுக்கடைகளை பாதுகாப்பதை விட மலைகளை பாதுகாப்பது முக்கியம். இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டால் திரும்ப கிடைக்குமா?” என்றனர். பின்னர் மனுவிற்கு அரசு தரப்பில் விரிவான பதில்மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தனர்.

தேடப்படும் குற்றவாளியுடன் மாட்டு வண்டி ஓட்டிய விஜய்

இதுதான் தூய சக்தியா என அதிமுக கேள்வி



திருப்பூர், அக். 6: தாராபுரத்தில் முதல்வர் விஜய்க்கு மாட்டு வண்டி ஓட்டியவர் தேடப்படும் குற்றவாளி என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குண்டடம் அருகே பொட்டிக்காம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் அசோக் (37). விவசாயியான அவர் பொட்டிக்காம்பாளையம் அதிமுக பொறுப்பாளராக இருந்தார். இவர், கடந்த மாதம் 26ம் தேதி பொட்டிக்காம்பாளையம் பகுதியில் பிரசாரம் செய்ய வந்த தவெக வேட்பாளர் சத்தியபாமாவை கிராம மக்கள் தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்பினர். இதுதொடர்பாக குண்டடம் போலீசார் அதிமுக நிர்வாகி அசோக் உள்பட 15 பேர் மீது சட்டவிரோதமாக கூடுதல், தனிநபர் செல்லும் பாதையை தடுத்து நிறுத்துதல், ஆபாசமாக பேசுதல், காயத்தை ஏற்படுத்துதல், கொலை மிரட்டல், பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல், வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகிய 7 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கில் அசோக் தவிர மற்ற அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர். தேடப்படும் குற்றவாளியாக அசோக் உள்ளார்.

இந்த நிலையில் தாராபுரம் தொகுதியில் நேற்று முன்தினம் ரோடு ஷோ நடத்திய விஜய்க்கு மாட்டு வண்டியை அசோக்கை வைத்தே ஓட்டியுள்ளது தற்போது தெரியவந்துள்ளது. இது குறித்து திருப்பூர் மாவட்ட அதிமுக செயலாளர் செல்வகுமார் கூறுகையில், “அசோக்கை அமைச்சர் மிரட்டி தவெகவில் சேர்த்து விஜய்க்கு மாட்டு வண்டி ஓட்ட வைத்துள்ளார். இதில் இருந்தே தெரிகிறது, இந்த ஆட்சி ரீல்ஸ் ஆட்சி என்று. இந்த நடிப்பு ஆட்சியை மக்கள் நம்பி விடக்கூடாது.

மீண்டும் ஏமாந்து வாக்களித்து விடாதீர்கள். திருப்பூர் மாவட்டத்தில் அதிமுகவில் உள்ள முக்கிய நபர்களை மிரட்டி, தவெகவில் இணைய வைப்பதற்காகவே ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கெல்லாம் எங்களிடம் ஆடியோ ஆதாரம் உள்ளது. அதனை தேவைப்படும் இடத்தில் நாங்கள் தருவோம். அசோக்கை மட்டுமல்ல பலரையும் மிரட்டி கட்சியில் சேர்த்து உள்ளார்கள். காவல் துறையை கையில் வைத்துள்ள முதலமைச்சருக்கு, போலீசாரால் தேடப்படும் குற்றவாளி அருகில் அமர்ந்து மாட்டுவண்டி ஓட்டி உள்ளார். இதுதான் தூய சக்தியா? இதற்கு தாராபுரம் தொகுதி மக்கள் தக்க பதிலடி தருவார்கள்” என்று தெரிவித்து உள்ளார். தாராபுரத்தில் விஜய்க்கு மாட்டு வண்டி ஓட்டியவர் குறித்து அதிமுக கிளப்பியுள்ள இந்த குற்றச்சாட்டும், மிரட்டி வண்டி ஓட்ட வைத்ததாக கூறப்படும் புகாரும் தேர்தல் களத்தில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளன.

விஜய்க்கு மாட்டு வண்டி ஓட்டியவர்

செங்கோட்டையன் மிரட்டலுக்கு பணிந்து தவெகவில் சேர்ந்தவர்

– நாதக குற்றச்சாட்டு

திருப்பூர் தாராபுரம் காமராஜ்புரத்தில் நேற்று முன்தினம் நாதக வேட்பாளர் கார்த்திகாவை ஆதரித்து பொதுக்கூட்டத்தில் சாட்டை துரைமுருகன் பேசுகையில், மதுராந்தகத்தில் டிராக்டர் ஓட்டிய முதல்வர் விஜய், தாராபுரத்தில் மாட்டு வண்டி ஓட்டுவார் என நினைத்தோம். அதேபோல் தாராபுரத்தில் மாட்டு வண்டி ஓட்டியுள்ளார். அந்த மாட்டு வண்டியை ஓட்டியது யார்? என கேட்டால் கடந்த சில நாட்களுக்கு முன்பு பொட்டிக்கம்பாளையம் என்ற ஊரில் தவெக வேட்பாளர் சத்தியபாமா வாக்கு கேட்டு சென்ற போது, ஊரை விட்டு வெளியே செல் துரோகி என பேசிய அசோக் தான் விஜய்யை வைத்து மாட்டு வண்டி ஓட்டியுள்ளார். தவெக வேட்பாளரை விரட்டிய அசோக் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்ய அழைத்துச் சென்றார்கள். அப்போது அமைச்சர் செங்கோட்டையன் மற்றும் கே.வி.ராமலிங்கம் ஆகியோரிடம் இருந்து அசோக்கிற்கு ஒரு அழைப்பு வருகிறது. அதில் பேசிய செங்கோட்டையன் உன்னை கைது செய்யாமல் இருக்க வேண்டும் என்றால் தவெகவில் இணைய வேண்டும் என கூறி மிரட்டி கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளார். அந்த அசோக்கை வைத்து மாட்டு வண்டி ஓட்ட வைப்பது தவெகவின் அநாகரிகமான அரசியல் என்று கூறியுள்ளார்.

தவெக சார்பில் வாக்காளர்களுக்கு சேலை, காமாட்சி விளக்கு விநியோகம்

தவெக வேட்பாளர் சத்தியபாமாவுக்கு வரவேற்பு இல்லாததால், வாக்காளர்களுக்கு விஜய் படம் ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட டிபன் பாக்ஸில் தலா ரூ.5 ஆயிரத்தை வைத்து வீடு, வீடாக விநியோகம் செய்ததாக புகார் கூறப்பட்டது. இந்நிலையில், தவெக நிர்வாகிகள் தொகுதி முழுவதும் முகாமிட்டு, நேற்று வீடு வீடாக சென்று சேலை மற்றும் காமாட்சி விளக்கு விநியோகம் செய்தனர். தாராபுரம் மானூர்பாளையம் பகுதிக்கு உட்பட்ட பூத் எண் 29, 30 ஆகிய பகுதிகளில் வீடு, வீடாக இப்பரிசு பொருட்கள் விநியோகம் செய்யப்பட்ட போது சிலர் மொபைல் போனில் வீடியோ எடுத்து, அதை சமூக வலைதளங்களில் பரவ விட்டுள்ளனர்.

விஜய் ரோடு ஷோவுக்கு விதி மீறி பல மடங்கு செலவு

தவெக வேட்பாளர்கள் மீது தேர்தல் ஆணையத்தில் புகார்

மதுரை, அக். 6: தேர்தல் ஆணையம் நிர்ணயித்ததை விட விஜய் ரோடு ஷோவிற்கு பல மடங்கு செலவிடப்பட்டதால், தவெக வேட்பாளர்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டுமென தேர்தல் ஆணையத்திற்கு புகார் மனு அனுப்பப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், மேலூரைச் சேர்ந்த வக்கீல் அமலன், தேர்தல் ஆணைய தலைமை அதிகாரிக்கு அனுப்பியுள்ள மனு:

தமிழ்நாட்டில் தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளுக்கு அக்.6ம் தேதி (இன்று) இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தொகுதிகளில் போட்டியிடும் தவெக வேட்பாளர்கள் சத்தியபாமா மற்றும் மரகதம் குமரவேல் தேர்தல் விதிகளை மீறி பல கோடி ரூபாய் செலவு செய்துள்ளனர். இதனை தேர்தல் செலவு கணக்கில் சேர்த்து அவர்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி தவெக வேட்பாளர் சத்தியபாமாவிற்கு ஆதரவாக அக்கட்சியின் தலைவரான முதலமைச்சர் விஜய் 2 நாள் ரோடு ஷோ மேற்கொண்டார். இதற்கு பெருமளவு செலவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைய விதிப்படி ஒரு வேட்பாளர் அதிகபட்சமாக ரூ.40 லட்சம் செலவிடலாம். ஆனால், தாராபுரத்தில் நடந்த முதல்வரின் இரண்டு நாள் ரோடு ஷோக்கு மொத்தச் செலவு ரூ.2.27 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என கூறப்படுகிறது.

இதேபோல், மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலுவுக்காக முதல்வர் விஜய் அக். 2ல் மாமண்டூர் முதல் மாம்பாக்கம் வரை சுமார் 45 கி.மீ. தூரம் பிரமாண்ட ரோடு ஷோ நடத்தினார். இதற்காக ரூ.1.05 கோடி செலவாகியுள்ளது. அலங்காரங்கள், கொடிக்கம்பங்கள், வாகனங்கள், இசைக் குழுக்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் உட்பட ஒரு நாள் ரோடு ஷோவின் மொத்தச் செலவு பல கோடி இருக்கும். இது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 123 (6)ன் கீழ் ஊழல் நடவடிக்கை ஆகும். எனவே, தேர்தல் ஆணையம் வீடியோ கண்காணிப்புக் குழு பதிவு செய்த காணொலிகளை பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும். காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் உள்ளாட்சிப் பதிவேடுகளை ஆய்வு செய்து, மாவட்டத்தேர்தல் அலுவலரின் விலைப்பட்டியலின்படி செலவுகளை மதிப்பீடு செய்து வேட்பாளரின் செலவு பதிவேட்டில் சேர்க்க வேண்டும். இரண்டு வேட்பாளருக்கும் நோட்டீஸ் அனுப்பி, அத்துமீறிய செலவினங்களை அவர்களது அதிகாரப்பூர்வத் தேர்தல் செலவுக் கணக்கில் சேர்க்க வேண்டும். முறையான செலவு கணக்கைத் தாக்கல் செய்யத் தவறும் வேட்பாளரை 3 ஆண்டுகளுக்கு தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாக்குரிமை பறிப்பு எதிர்த்து விஜய் குரல் கொடுக்க வேண்டும்

இந்திய கம்யூ. வீரபாண்டியன் வலியுறுத்தல்

கோவில்பட்டி, அக். 6: வாக்குரிமை பறிப்பு எதிர்த்து முதல்வர் விஜய் குரல் கொடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

கோவில்பட்டியில் நேற்று அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தேர்தல் முறைகளில் மாற்றம் தேவைப்படுகிறது. வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களை விலை பேசும் கலாசாரத்தை பாஜ தொடங்கி வைத்துள்ளது. அதன் பாதிப்பு தமிழ்நாட்டிலும் ஏற்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர், கட்சி மாறும்போது அல்லது மக்களின் நம்பிக்கைக்கு எதிராக செயல்படும்போது, அவரை திரும்ப அழைத்துக் கொள்ளும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்க வேண்டும். இதுபோன்ற தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து சிந்திக்க வேண்டும். பெரிய கட்சிகளின் தலைவர்கள் கூட்டங்களில் பேசும்போது அரசியல் குறித்து பேசாமல் தனிநபர் தாக்குதலை முன் வைக்கின்றனர். இது கண்ணியமற்றது. தமிழ் பண்பாட்டுக்கு ஏற்றதல்ல.

விலைவாசி உயர்வு உள்ளிட்ட மக்கள் பிரச்னைகளுக்காக இந்திய கம்யூ. சமரசமின்றி போராடி வருகிறது. தவறான ஆட்சிக்கோ, தவறான திசைக்கோ ஆதரவாக நாங்கள் இல்லை. அவ்வாறு நிலை ஏற்பட்டால் தொடர்ந்து போராடுவோம். இடைத்தேர்தலில் நீண்ட காலமாக பணநாயகமே மேலோங்கி உள்ளது. ஒன்றிய அரசு அதிகாரத்தை குவித்துக் கொண்டுள்ளது. 13 கோடி பேரின் வாக்குரிமையை நாட்டின் பிரதமரும், உள்துறை அமைச்சரும் பறித்துள்ளனர். இதுபோன்ற நடவடிக்கை சாதாரணமானது அல்ல. இது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்டுள்ள படுகொலை. இதனை நிகழ்த்திய பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் தலைமை தேர்தல் ஆணையர் ஆகிய 3 பேரும் வரலாற்றின் குற்றவாளிக் கூண்டில் நிற்கின்றனர். தலைமை தேர்தல் ஆணையர் ராஜினாமா செய்ய வேண்டும். நாடாளுமன்ற ஜனநாயகத்தை காப்பாற்ற அனைவரும் இந்த அநீதிக்கு எதிராக போராட வேண்டும். தமிழ்நாடு முதல்வர் விஜய் இதுகுறித்து உரக்க குரல் எழுப்ப வேண்டும். வாக்களிக்கும் முறைதான் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடித்தளம். அதை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டணியில் இருப்பவர்களே தவெகவை விமர்சிக்கும் நிலை

கனிமொழி எம்பி கிண்டல்

தூத்துக்குடி, அக். 6: கூட்டணியில் இருக்கக் கூடியவர்களே தவெகவை விமர்சிக்கும் நிலை உள்ளது என்று கனிமொழி எம்பி கூறினார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி எம்பி. நேற்று அளித்த பேட்டி: இடைத்தேர்தலில் நிச்சயமாக, நியாயத்திற்கு ஒரு வெற்றியையும், மக்களை ஏமாற்றி ஜனநாயகத்தைப் படுகுழியில் தள்ளக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கக்கூடிய தவெகவிற்கு ஒரு பாடம் சொல்லித் தரக்கூடிய அளவிற்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்களுடைய கூட்டணியில் இருக்கக் கூடியவர்களே தவெகவை பற்றி விமர்சனம் செய்யக் கூடிய அளவிற்கு, அவர்கள் நேர்மையான, தூய சக்தி ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் எந்தத் தவறும் செய்யப் போவதில்லை, செய்ய மாட்டோம் என்று தொடர்ந்து பெருமையாக மேடைக்கு மேடை பேசினால் போதாது. உண்மையிலேயே அப்படி இருக்க வேண்டும்.

தவெக ஆட்சியில் மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை, பாதுகாப்பு இல்லை, குற்றங்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் ஒரு அச்சத்தோடேயே வாழக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எந்த வித வளர்ச்சிக்கான திட்டங்களும் கிடையாது, தொழில் முதலீடுகள் கிடையாது. இதில் மக்களை ஏமாற்றி, நாங்கள் தூய சக்தி என்று சொல்லி வருகிறார்கள். அதே வேளை மக்களுக்கு பணப்பட்டுவாடா செய்வதற்குப் பணம் எங்கிருந்து வருகிறது. இப்படிப்பட்டவர்களுடைய உண்மையான முகத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கே அதிகமாக பிரசாரம் செய்யாத ஒரு முதலமைச்சர், இடைத்தேர்தலில் தெருத் தெருவாகப் போய் பிரசாரம் செய்திருக்கிறார் என்றால், தம்பி விஜய் அவர்களுக்கு நிச்சயமாக தேர்தலில் ஒரு பயம் இருக்கிறது என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. திமுக தலைவர் யாருடைய மனமும் புண்படும் வகையில் பேசக் கூடியவர் இல்லை. இவ்வாறு கூறினார்.

ரீல்ஸ் வெளியிட்டு 118 பவுன் நகை பறி கொடுத்த

பிரபல பெண் யூடியூபர் மீது திருட்டு வழக்கு பதிவு

காண்ட்ராக்டருக்கு மசாஜ் செய்வது போல் நடித்து செயின் பறிப்பு

நாகர்கோவில், அக்.6: குமரியில் 118 பவுன் நகை பறி கொடுத்த பிரபல பெண் யூடியூபர் மீது திருட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கான்ட்ராக்டர் ஒருவருக்கு, மசாஜ் செய்வது போல் நடித்து செயின் பறித்த புகாரில் இந்த வழக்கு பதிவு செய்துள்ளனர்.

நாகர்கோவில் அருகே தம்மத்துக்கோணத்தில் வசிக்கும் பிரபல யூடியூபர் மதுமிதா (28) வீட்டில் புகுந்து கடந்த மாதம் 24ம்தேதி 118 பவுன் நகைகளை கொள்ளையடித்த இசக்கிபாண்டி (30) உள்பட 4 பேரை போலீசார் கைது செய்து 98 பவுன் நகைகளை மீட்டனர். இந்நிலையில் மதுமிதா ஏற்கனவே பிசியோதெரபிஸ்ட் என கூறி, ஸ்பாக்களில் பணியாற்றி வந்ததும், நாகர்கோவில் வடசேரி காவல் நிலையத்தில் அவர் மீது பாலியல் வழக்கு இருப்பதும் இப்போது தெரிய வந்தது. இந்நிலையில், திருநெல்வேலியை சேர்ந்த கட்டிட கான்ட்ராக்டர் பேச்சிமுத்து (89), ராஜாக்கமங்கலம் காவல் நிலையத்தில் அளித்துள்ள புகாரில், “திருநெல்வேலியில் உள்ள ஒரு ஸ்பாவில் சில ஆண்டுகளுக்கு முன் மசாஜ் செய்ய சென்ற போது, தற்போதைய யூடியூபர் மதுமிதா அங்கு பிசியோதெரபிஸ்ட் ஆக இருந்தார். பின்னர் அடிக்கடி செல்போனில் பேசினார். பின்னர் எனக்கு போன் செய்து அழைத்து காரில் ஏறி எனது டீ ஷர்ட்டை கழற்ற செய்து, மசாஜ் செய்ய முற்பட்டார். நான் விருப்பம் இல்லை என கூறி அவரை திருநெல்வேலி சந்திப்பு பஸ் நிலையத்தில் பஸ்சில் ஏற்றி அனுப்பினேன். அதன் பின்னர்தான் எனது 5 பவுன் செயின் மாயமானது தெரிந்தது. அது பற்றி மதுமிதாவிடம் கேட்ட போது, உன்னால் முடிந்ததை பார், புகார் செய்தால் அசிங்கப்படுத்தி விடுவதாக மிரட்டினார். இதனால் அப்போது புகார் அளிக்கவில்லை. தற்போது இந்த புகார் மனுவை கொடுக்கிறேன்” என கூறியுள்ளார். இதன் அடிப்படையில் தற்போது ராஜாக்கமங்கலம் போலீசார், மதுமிதா மீது செயின் பறிப்பு வழக்கு பதிவு செய்து, சம்பவ இடம் திருநெல்வேலி மாநகருக்கு உட்பட்டது என்பதால், அங்கு அனுப்பி வைத்துள்ளனர். யூடியூபர் மதுமிதா மீது செயின் பறிப்பு வழக்கு பதிவு செய்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அம்பை அருகே பயங்கரம்

தச்சு தொழிலாளி அடித்து கொலை

மானூர், அக். 6: அம்பை, கல்லிடைக்குறிச்சி கரண்டை பகுதியைச் சேர்ந்தவர் கணேசன் (47). தச்சு தொழிலாளி. இவர் மானூர் அருகே வடக்கு வாகைகுளத்தில் மர அறுவை மில்லில் தங்கி வேலை செய்து வந்தார். நேற்று காலை தலையில் காயங்களுடன் இறந்து கிடந்தார். மானூர் போலீசார் வந்து, உடன் தங்கிய தொழிலாளி தூத்துக்குடி, பூபாலராயர்புரம் சேட்டன் என்ற சந்திரன் (58), வடமாநில தொழிலாளர்கள் இருவரிடம் விசாரணை நடத்தினர். இதில் சந்திரன் கொலை செய்ததை ஒப்பு கொண்டார். நேற்று முன்தினம் இரவு சந்திரன் சமைத்து வைத்திருந்த சிக்கனை அவருக்கு தெரியாமல் கணேசன் சாப்பிட்டுள்ளார். இது தொடர்பான தகராறில் போதையில் இருந்த சந்திரன் மரக்கட்டையால் அடித்ததில் கணேசன் இறந்துள்ளார். இதையடுத்து சந்திரனை போலீசார் கைது செய்தனர்.

VELAMMAL NEXUS
VELAMMAL VIDYALAYA, AVADI
FELICITATES
OUR PRIDE
VITHYA RAMRAJ
3 MEDAL WINNER
AT THE ASIAN GAMES 2026
DATE: 7-10-2026 TIME: 9.30 AM
VENUE: VELAMMAL VIDYALAYA, AVADI
7358-39-0408
www.velammalnexus.edu.in

SHRIRAM Finance ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்

திருக்கழுக்குன்றம் கிளை: எண்.32, கம்மாளர் தெரு, 1வது தளம்,
ICICI பேங்க் மாடியில், திருக்கழுகுன்றம், செங்கல்பட்டு மாவட்டம்-603 109

கோரிக்கை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002-ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு ஒன்று **கடன்தாரர்: 1.செந்தாமரை கண்ணன்,** S/o.துரைசாமி, **குடியிருப்பு முகவரி,** எண்.134/137, கொய்யத்தோப்பு, குழிப்பந்தண்டலம், மானாமதி (அஞ்சல்) திருக்கழுக்குன்றம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்-603105 **மேலும் முகவரி,** எண்.36, அழகேசன் நகர், செங்கல்பட்டு தாலுகா & மாவட்டம் - 603001 **2.T.சுரேஷ்,** S/o.தாந்தோனி, **குடியிருப்பு முகவரி,** எண்.27/11, முஜிபு ஜங்பதூர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005 **மேலும் முகவரி,** ஆண்டிகுப்பம், குழிப்பந்தண்டலம், திருக்கழுக்குன்றம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்-603105 ஆகியோருக்கு பதிவு அஞ்சல் மூலமாக **11.08.2026** அன்று அனுப்பப்பட்டது.

பொருள்: M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட், திருக்கழுக்குன்றம் கிளையில் வைத்துள்ள **முறையான அடமான கடன் கணக்கு எண். TRKRMO803310001 தொடர்பாக.**

NPA தேதி: 25.10.2019

நீங்கள் மேற்படி கடன் கணக்குகள் தொடர்பாக **11.08.2026 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை ₹ 20,57,820/-** (ரூபாய் இருபது லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்) மற்றும் **12.08.2026** முதல் அத்தொகை செலுத்தப்படும் வரையான ஒப்புக்கொள்ளப்பட்ட வீதத்தில் மேல் வட்டியையும் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள். மேற்படி சட்டத்தின் கீழ் கம்பெனியானது **11.08.2026 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை ₹ 20,57,820/-** செலுத்துமாறு கோரி **11.08.2026 அன்று அறிவிப்பு ஒன்றை உங்களுக்கு அனுப்பியது.**

உங்களில் **1வது நபருக்கு பதிவு அஞ்சலில் ஒப்புகைச்சீட்டுடன் அனுப்பப்பட்ட அந்த அறிவிப்பு “அவர்களின் முகவரியில் நபர் இல்லை” மற்றும் 2வது நபர் அவர்களால் “பெறப்பட்டது”.** எனவே, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், கடன் நிலுவைத்தொகை **11.08.2026 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை ₹ 20,57,820/-** (ரூபாய் இருபது லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்) மற்றும் **12.08.2026** முதல் அத்தொகை செலுத்தப்படும் தேதி வரையான வட்டியையும் சேர்த்துச் செலுத்துமாறு இதன்மூலம் உங்களிடம் கோரப்படுகிறது. தவறினால் கிழ்காணும் அட்டவணையில் உள்ள கடனுக்கு ஈடான அடமான சொத்து மீது கம்பெனி தமக்குள்ள அமலாக்க அதிகாரத்தை, உரிமையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த அறிவிப்பு கம்பெனிக்கு இருக்கும் இதர எந்தவொரு உரிமைக்கும் பாதகமின்றி வெளியிடப்படுகிறது.

அதாவது தற்போது DRT/RO-DRT/DRAT/நீதிமன்றம் முன்னிலையில் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைகளுக்கும் பெறப்பட்ட / பெறப்படவுள்ள ஆணைகள் / தீர்ப்பு ஆணைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு கம்பெனிக்கு இதர எந்தவொரு இருக்கும் உரிமைகளுக்கு பாதகமின்றியும் இந்த அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது.

அசையா சொத்து விபரம்

சொத்தானது (I) Mr.செந்தாமரை கண்ணன்-க்கு சொந்தமான சொத்து (விற்பனை பத்திர ஆவண எண்.3613 / 2010).
செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.494/7, **குழிப்பந்தண்டலம் கிராமம், திருக்கழுக்குன்றம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்** என்னும் முகவரியில் **0.35 சென்ட் புஞ்சை நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: காசி நாயக்கர் நிலம், தெற்கு: சர்வே எண்.495/3-ல் உள்ள துரைசாமி நாயக்கர் மீதமுள்ள நிலம், கிழக்கு: சர்வே எண்.496-ல் உள்ள ஏரைக்கரை புறம்போக்கு (கொய்யாத்தோப்பு கிராம ரோடு), மேற்கு: சர்வே எண்.494/5-ல் உள்ள துரைசாமி நாயக்கர் மீதமுள்ள நிலம்.

தேதி: 11.08.2026, இடம்: **திருக்கழுக்குன்றம்** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்**

OMKARA
ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்
CIN No.U67100TZ2014PTC020363
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அலுவலர் கைப்பேசி எண்: +91 93446 84194/ +91 98840 62068 / +91 99623 33307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட். (OARPL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை மின்–ஏல முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட். (OARPL) (ஓம்காரா PS 30/2021–22 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்) நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 11.01.2022 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட் (IBL) நிறுவனத்திடமிருந்து (ஒப்படைப்பு வங்கி) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்கிணங்க OARPL நிறுவனமானது ஒப்படைப்பு நிறுவனத்தின் சார்பாகக் களமிறங்கிக் கடன்களைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது. அதையடுத்து OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் ஒப்படைப்பு நிறுவனத்திடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுச் சொத்தின் கையக சுவாதீனத்தைக் கையகப்படுத்தியுள்ளார். இந்நிலையில் OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடன்களைத் திரும்பப் பெறும் பொருட்டுக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சொத்துக்கள் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும் உபக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில் OARPL நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே தொடர்புடைய பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையைத் திரும்பப் பெறும் வகையில் சர்ஃபாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) ஆகியவற்றின் கீழான உரிமைகள் மற்றும் அதிகாரங்களின்படி **“உள்ளது உள்ள இடத்தில்”, “உள்ளது உள்ளபடி”, “உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்”, “திரும்பப் பெறப்பட மாட்டாது”** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்), கடனீட்டுச் சொத்துக்கள், நிலுவைத் தொகைகள், பிரிவு 13(2)–இன் கீழான கோரிக்கை அறிவிப்பின் தேதி, சுவாதீன தேதி, நிர்ணய விலை, ஏல உயர்வுத் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர் & உப கடன்தாரர்களின் பெயர் M/s. டீப் இண்டிகோ (கடன்தாரர்), திரு. ப்ரித்குமார், திருமதி.காயத்ரி தல்வார் (உப கடன்தாரர்கள்)

கடனீட்டுச் சொத்து விவரங்கள் – சொத்தின் உரிமையாளர் திரு. N.ப்ரித்குமார், த/பெ, திரு.நவநீத கிருஷ்ணன்
“கிரெம்ளின்ஸ் ஸ்கொயர் அபார்ட்மென்ட்” என அறியப்படும் கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் பிளாக் F–இல் உள்ள பிளாட்டின் அனைத்து துண்டு மற்றும் பகுதிகள். மனைஎண் 1, கதவு எண்.6, மின்வாரிய காலனி, 2 ஆவது தெரு, ஆதம்பாக்கம், சென்னை 600 088, அடித்தளப் பரப்பு 1300 சதுர அடி (சரிவிகிதப்பங்கு கொண்ட பொதுப் பகுதிகள் மற்றும் F எனப் பெயரிடப்பட்ட மூடப்பட்ட கார் நிறுத்துமிடம் சேர்த்து) மற்றும் நிலத்தின் பிரிபடாப்பங்கு 480 சதுர அடி உட்பட மொத்தப் பரப்பளவு 2463 சதுர அடியில் அடங்கியது, பழைய சர்வே எண் 535/2 பாகம், பிந்தைய சர்வே எண் 535/2B, பட்டாவின்படி புதிய T.S எண் 44. அமைவிடம் வேளச்சேரி கிராமம், கிண்டி தாலுகா, சென்னை மாவட்டம். மொத்த சொத்தின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கில்: மனை எண் 1 மற்றும் 2, சர்வே எண் 535/1, தெற்கில்: 30 அடிச் சாலை, கிழக்கில்: மனை எண் 2, மேற்கில்: சங்கர் குட்டியின் கட்டடம். இது சென்னை தெற்குப் பதிவு மாவட்டம் மற்றும் வேளச்சேரி சார்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது.

சொத்தின் உரிமையாளர்: திரு. N.ப்ரித்குமார், த/பெ, திரு. நவநீத கிருஷ்ணன்

13(2)–இன்கீழான அறிவிப்பு தேதி: 04.03.2019
கையக சுவாதீன தேதி: 08.10.2024
05.10.2026 தேதிப்படி நிலுவைத்தொகை: ரூ.2,52,08,471/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்திரண்டு லட்சத்து எட்டாயிரத்து நானூற்று எழுபத்தொன்று மட்டும்)
நிர்ணய விலை: ரூ.56,00,000/– (ரூபாய் ஐம்பத்தாறு லட்சம் மட்டும்)
முன்வைப்புத்தொகை (EMD) (நிர்ணய விலையில்10%): ரூ.5,60,000/– (ரூபாய் ஐந்து லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)
ஏலம் உயர்த்தும் தொகை: ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)
சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம்: மேலே குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்கள் மூலமாக அதிகாரப்பூர்வ அலுவலரிடம் முன் அனுமதி பெற்று.
கணக்கு விவரங்கள்: **கணக்கு எண்.**055505010221, **பயனாளரின் பெயர்:** ஓம்காரா PS 30/2021–22 ட்ரஸ்ட், **வங்கியின் பெயர்:** ஐசிஐசிஐ பேங்க், **கிளை:** பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC Code: ICIC0000555
மின் ஏல தேதி மற்றும் நேரம்: 28ஆம் தேதி அக்டோபர் 2026 (புதன்கிழமை) அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை
ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்: 26ஆம் தேதி அக்டோபர் 2026 (திங்கட்கிழமை) அன்று மாலை 04:00 மணிக்குள்.

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஓஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் மின்னணு ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடத்துவது குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கும். இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 06.10.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்கு அறிவுறுத்தும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

V M திவாகரன்
அதிகாரப்பூர்வ அலுவலர்,
கைப்பேசி எண்: 99623 33307
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட்.
(ஓம்காரா PS 30/2021–22 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்)

தேதி: 06.10.2026
இடம்: சென்னை